1971 டிசம்பர் 16]

பத்து ஆண்டுகளுக்கு மேலாக, உண்டுறை உதவித்தொகைகளை திருத்தி அமைக்காத காரணத்தால் இவ்வாண்டு முதல் கூடுதலாக கொடுக்க அரசு ஆணைப்பிறப்பித்துள்ளது. அதன் விவரம் பின் வருமாறு :

படிப்பு.	சென்னை.		மற்ற இடங்கள்.	
	அரிசன பழங்குடி, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர்.	பின் தங்கிய வகுப்பினர்.	அரிசன பழங்குடி, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர்.	பின் தங்கிய வகுப்பினர்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ஒரு மாதத்திற்கு அளிக்கப்படும் தொகை-ரூபாயில்)			
1 கலை, விஞ்ஞானம், சட்டம்.	70(60)	60(40)	55(50)	50(35)
2 தொழில் நுட்ப படிப்புகள் பொறியியல், விவசாயம், கால் நடை வைத்தியம் முதலியன.	75(70)	60(40)	70(70)	55(35)
3 தொழில் சம்பந்தப்பட்ட குறுக்குப் படிப்புகள் (எல்.சி.இ.), எல்.எம்.இ.) போன்றவை.	60(50)	50(40)	50(45)	45(35)

(அடைப்புக் குறிகளுக்குள் உள்ளவை, பழைய உதவித்தொகை விகிதம்)

ஆக கிட்டத்தட்ட 20 ரூபாய், 25 ரூபாய் வரை, முன் இருந்ததை விட ஒவ்வொரு இனத்திலும் உயர்த்தித் தரப்படுகிறது.

உதகை அரிசன மாணவ விடுதிக்குக் கட்டடம்

*463 வினா.—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், உதகை நகரத்தில் அரிசன மாணவர்கள் உணவு விடுதி கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 1971-72 ஆண்டில் விடுதிகளுக்கு கட்டடம் கட்டுவதற்காக ரூ. 2.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஐந்து இடங்களில் (உதகை உட்பட) கட்டுவதற்கு அரிசன நல இயக்குநர் பரிந்துரை செய்தார். அரசு கவனமாய்ப் பரிசீலனை செய்து உதகையில் இவ்வாண்டு கட்டிடம் கட்ட மேற்கொள்ளப்பட வேண்டாமென முடிவு செய்துள்ளது.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, தற்போதுள்ள உணவு விடுதியில் மாணவர்களுக்கு வசிப்பதற்குப் போதிய சௌகரியம் இல்லாதிருந்தாலும் அதற்கு ஏறிய வாடகை கொடுப்பதாலே, இதைத் தவிர்க்க அரசு உடனடியாக இதைத் துவங்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டே அதை எடுத்துக்கொள்ளலாம் என்று முதலில் இயக்குநர் முடிவு செய்தார், உதகையிலே மாணவர் விடுதி கட்ட வேண்டுமென்று. ஆனால் நிதிநிலை நெருக்கடி இருப்பதால் விடப்பட்டிருக்கின்றது. நிதிநிலை நெருக்கடி தீர்ந்த பிறகு வேண்டுமென்றால் பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

Badaga Association at Madras

* 464. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether the delegation of the Badaga Association, Madras met him on or about 3rd May 1971 ; and

(b) if so, the details thereof;

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) படகர் சங்கம் கொடுத்த விண்ணப்பத்தில், படகர்களின் பழக்க வழக்கங்கள் சம்பந்தப்பட்ட சில தவறான, ஆட்சேப கரமான விவரங்கள் 1908-ம் ஆண்டில் அரசால் பிரசுரிக்கப்பட்ட நீலகிரி மாவட்ட விவரச் சுவடியில் இருப்பதாகவும் அவைகளை நீலகிரி மாவட்ட விவரச் சுவடியிலிருந்து நீக்கும்படியும் கேட்கப் பட்டிருந்தது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

கூடலூரிலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள்

* 465 வினு—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரிலிருந்து இதுவரை எத்தனைக் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன ?

(இ) வெளியேற்றப்பட்டவர்களுக்கு வேறு உறைவிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ கூடலூர் தாலுக் காவைச் சேர்ந்த பந்தலூ பிர்க்காவிலுள்ள சர்க்கார் நிலங்களி லிருந்து இதுவரை 154 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன.

(இ) அரசின் 1—9—1971 தேதியிட்ட வருவாய்த்துறை ஆணை எண் 2405-ன்படி மேற்படி 154 குடும்பங்களுக்கு வேறு நிலங்கள் கொடுக்க முடியுமா என்பதுபற்றி மாவட்ட ஆட்சியாளர் பரிசீலித்து வருகிறார்.